881

881

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 AUG 1941
MADRAS

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை வெளிவரும்.



Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கொத்து 32 | 15 ஆகஸ்டு 1941 | மலர் 2

3c
ஜவா, NIIPP
N 41.32.2.
182459.

முறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள்	25
2.	சென்னை கல்வி இலாகா	27
3.	நமது மாகாண கல்வி இலாகா தலைவர் சொற்பொழிவு	28
4.	தமிழ்த் தொண்டு	31
5.	ஆசிரிய உலகம்	32
6.	பாடக் குறிப்பு	35
7.	பாடசாலையில் தேகப்பயிற்சி	39
8.	பயிரிடுவோர் பழமொழிகள்	41
9.	அதிசயம்! இது அதிசயம்!!	42
10.	"யோசனைக் கணக்கு" & விடுகவி விடை ...	44
11.	சிறுவர்களுக்கான கதைகள்	45
12.	உங்களுக்குத் தெரியுமா?	47
13.	நமது சரடு	49
14.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	52
15.	எலமனூர் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கத் திறப்புவிழா	52
16.	சுகாதாரப்பகுதி	53
17.	பாலர் ஸங்கீதம்	54
18.	மதிப்புரை	56

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher :
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 32] 15 ஆகஸ்டு 1941 [மலர் 2

பத்திராதிபர் குறிப்புகள்

The School Annual Inspection by D. E. O.

சென்ற மாதம் 28, 29, 30-ம் தேதிகளில் நமது ஜில்லா கல்வித் தலைவர் அவர்கள் நம் பாடசாலையைப் பார்வையிட்டனர். அவ்வமயம் நம் பாடசாலை மாணவ-ஆசிரியர் சங்கத்தின் ஆதரவின்கீழ், "கிராம ஆசிரியர்களின் கடமை" எனும் விஷயமாய் அரியதோர் சொற்பொழிவை நிகழ்த்தினர்: ஆரம்ப ஆசிரியர்கள் புது முறைகளைக் கையாடி போதனைகளை இன்னும் அதிகத் திறனுடன் நடத்தவேண்டுமென்றும், பெண் கல்வி விஷயமாய் ஆண்பிள்ளைகளைப்போல் பெண்பிள்ளைகளையும் பாடசாலைகளில் கட்டாயம் சேர்ந்து படிக்கும்படி பெற்றோர்களைத் தூண்ட வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

ஷை பார்வை நாட்களின் கடைசித் தினத்தன்று மாலை நமது ஆசிரியர்களைச் சந்தித்து, இப்பாடசாலைத் தலைமையாசிரியர் பாடசாலையின் முன்னேற்றத்தின் பொருட்டு உழைத்து வருவதையும், அதற்கேற்ப இப்பாடசாலைபுரியும் சேவைகளையும்பற்றி ப்ரஸ்தாபித்து, தாம் அடைந்துள்ள சந்தோஷத்தையும் தெரி

வித்து, மேலும் இப்பாடசாலே இன்னும் அதிக சேவைபுரியும் வண்ணம், கல்வித்துறையில் சில புது பரீட்சணங்கள் (Educational Experiments) செய்து பயன் எய்துமாறு கேட்டுக் கொண்டனர்.

நம்முடைய பாடசாலேயின் முன்னேற்றத்திற்காக நமது D. E. O. அவர்கள் கூறியுள்ள யோசனேகளே நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்; மேலும் அன்னவர் தெரிவித்தபடி கல்விப் பரீட்சணங்களேயும் (Educational Experiments) சாத்திய மானமட்டும் செய்துபார்க்க எண்ணியிருக்கின்றோம். இச்சந் தர்ப்பத்தில் நமது பாடசாலேயின் அபிவிருத்தியைக் கோரிவரு கின்ற அன்னவர்க்கு எமது நன்றி உரிமையாகும்.

பிரயோஜனமில்லே

ஒருவர் :—நான் காணமற்போனதாக சொன்ன பௌண்டன்பேனு வாஸ்தவத்தில் திருட்டு போகவில்லே அது அகப்பட்டு விட்டது.

போலீஸ்காரன் :—இனிமேல் சொல்லி பிரயோஜனமில்லே நாங்கள் திருடனே பிடித்தாகி விட்டது.

ஒரே விஷயம்

உபாத்தியாயர் :—டே, ஜான் குதிரையைப்பற்றி நீ எழுதிய வியாசமும் ; ராஜு எழுதிய வியாசமும் ஒன்ருகவே இருக்கின்றனவே !

ஜான் :—இரண்டு பேரும் ஒரே குதிரையைப்பற்றி எழுதியிருக்கிறோம்.

182459

சென்னை கல்வி இலாகா

Training School Leaving Certificate Examination, 1942 and 1943

(Fort St. George Gazette, page 548, dated 8-7-1941)

T. S. L. C. பரீட்சை **1942-1943**—1941-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற T. S. L. C. பரீட்சையிலும், அதற்கு முந்திய வருஷங்களில் நடைபெற்ற ஷ பரீட்சைகளிலும் தவறிப்போன செக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி ஹையர் கிரேடு மாணவர்கட்கு, பழைய பாடத் திட்டத்தின்படி, (அதாவது 1930-31-ல் ஏற்பட்ட திட்டம்) 1942, 1943 ஆகிய இந்த இரண்டு வருஷங்களில் மாத்திரமே, பரீட்சை நடைபெறும்.

பழைய திட்டத்தின்படி 1941-ம் வருஷத்திற்குக் குறித்திருந்த தமிழ்ப்பாட புத்தகங்களே (Detailed and non-detailed) 1942-ம் வருஷத்திற்கும், 1943-ம் வருஷத்திற்கும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஹையர் கிரேடு இங்கிலீஷ் பாடத்திற்கும் அவ்வாறே 1941-ம் வருஷத்திற்கு ஏற்படுத்தியிருந்ததை மீண்டும் 1942, 1943-ம் வருஷங்களுக்குக் குறித்திருக்கிறது. ஆகவே **பழைய பாடத்திட்டத்தின்படி** செக்கண்டரி கிரேடுக்கும், எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கும் T. S. L. C. பரீட்சை 1942, 1943 ஆக இந்த இரண்டு வருஷங்களில் மாத்திரமே நடைபெறும் என்பதை, இவ்வருஷத்திலும், முந்திய வருஷங்களிலும் தவறிப்போனவர்கள் கவனிப்பார்களாக.

ரகசியம்

தாத்தா :—ஏண்டா, நீ எழுதும் பேனாவில் மசியே இல்லே. நீபாட்டுக்கு எழுதிக்கொண்டிருக்கிறாயே?

பையன் :—ஆமாம் ஒரு ரகசிய கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

நமது மாகாண கல்வி இலாகா தலைவர் சொற்பொழிவு

நமது மாகாண கல்வி டைரக்டர் மிஸ்டர் ஸ்டாத்தம் துரையவர்கள் குண்டூர் திரவிய சகாய பாடசாலை மானேஜர்கள் ஆசிரியர்கள் மகா நாட்டில் ஜூலை மீ 23 ம் வ நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்ஸம் :—

நமது மாகாணத்தில் பெண் கல்வி 150 சதவீதமும் ஆண் கல்வி 127 சதவீதமும் அதிகரித்திருக்கிறது. அரசாங்கம் பெண் கல்வியை ஆண் கல்வியைவிட அதிகமாய் அல்லது சமமாகச் செய்யத் தீர்மானித்திருக்கிறது. இது நிறைவேறுமட்டும் நாங்கள் அமைதியுறோம். ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்காக முனைந்து உழைக்காத எந்தப் பாடசாலையையும் இனி சும்மா பார்த்துக்கொண்டிருக்கமுடியாது.

பொருளாதாரக் குறைவு அற்ற பள்ளிக்கூடங்களையும் திறமை உள்ள பள்ளிக்கூடங்களையுமே நாம் கொண்டிருத்தல் வேண்டும். இதை எய்தும்படியே அரசாங்கம் அநேக சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறது. சகல பெண்களும் கல்வியில் மேம்பாடடைதல் வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் மேல் வகுப்புக்களில் இன்னும் அதிகமாய்ப் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். கட்டாயக் கல்வி விஷயத்தில் இது அவசியந்தான்; ஆனால் பூரண பாடசாலைகளையும் திறன்வாய்ந்த ஆசிரியர்களையும் கொண்டிராமல் கட்டாயக்கல்வியை ஏற்படுத்துவதில் பயனில்லை. கட்டாயக் கல்வி அமுலில் இருந்துவரும் பிரதேசத்திலும் தேக்கம் இன்னும் நிவர்த்திக்கப்படவில்லை. கட்டாயக்கல்வி அற்ற பிரதேசத்தில் கவர்மென்டாரின் உத்தரவுகள் நல்ல பலன் தந்துள்ளன. பள்ளிக்கூடத்தில் சேர்ந்து, படித்து முழு அறிவாளிகளாய் வெளியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. நல்ல யோக்கியதாம்சம் பெற்ற ஆசிரியர்கள் பாடசாலையில்நியமனம்பெறவேண்டும். பாடதிட்டத்தில் கைவேலைகளும் கைத்தொழில் சம்பந்தமான பாடங்களும் சேர்க்கப்பட்டு பிரயோகிக்கப்படவேண்டும். கல்வியில் பின்னடைந்தோரை முன்னேற்றுதல், அவர்கள் உள்ள ப்ரதேசங்கள்மட்டில் விஷேட சிரத்தை எடுத்துக்கொள்ளுதல் அவர்கள்பால் கல்வி அபிவிருத்தி செய்தல் அன்னுரை ஏனையரின் நிலைக்குக் கொண்டுவருதல் முதலிய விஷயமாய் அதிகமாய் உழைக்கவேண்டும்.

முதியோர் கல்வியை நாம் இராப்பாடசாலை அல்லது வேறு விதப் பாடசாலைகள்மூலம் விர்த்திசெய்வதில் முனைந்துழைப்பதைவிட சாதாரண பாடசாலைகள் மூலம் இதை எய்தலாம் என்பது

இப்பொழுது வெளியாகிறது. உலகில் பொது ஜனக்கல்வி பள்ளிக்கூடங்களில் படித்துச் சென்றவரின் மூலமே பரவிவருகிறது. இந்நிலையை நாமும் அடைய பலவித மானேஜர் கீழுள்ள சகல பாடசாலைகளும் பூரண பாடசாலைகளாக மாறவேண்டும். அத்துடன் அப்பள்ளிகளின் மேல் வகுப்புச் சங்கியை அதிகப்படல் வேண்டும்.

பொருளாதாரக்குறைவுள்ள பாடசாலைகள் மூடப்படுவது பற்றிய அநேக விஷயங்கள் எம் சமூகம் வந்துள்ளன. ஆனால் இது விஷயத்தில் சற்று கண்டிப்பாகவே நாம் இருக்கவேண்டிய தவசியமாகிறது. நமது தேசத்தில், ஒரு மாகாணம் நீங்கலாக, ஏனையமாகாணங்கள் செலவிடும் தொகையைவிட நமது மாகாணம் ஆரம்பக் கல்விக்காக இருமடங்கு அதிகம் செலவிடுகிறது. ஆனால் இச்செலவைப் பொதுப் பண்டுகளிலிருந்து செய்கிறது. அந்தச் செலவுதொகை 2 கோடி ரூ. இது கல்விச்செலவில் 90% ஆகிறது.

ஆரம்பக்கல்வி அபிவிருத்திசெய்யாத மானியம் அளிக்கப்பட்டுள்ள அல்லது திரவிய சகாயம் பெறும் பாடசாலைகள் மட்டில் நாம் இனி சலுகை காட்டப்போவதில்லை. கல்வி அபிவிருத்தி அதிகரிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். மானேஜர்கள் இதற்குப் பண உதவி அதிகம் வேண்டும் எனலாம். உள்ளபடியே நானும் அதிகம் செலவுசெய்திருக்கிறேன். அரசாங்கம் இவ்வருடம் 13 லக்ஷ ரூ. அதிகமாகக் கொடுத்திருக்கிறது. இனி அரசாங்கத்தார் பொதுப் பண்டுகளினால் நடத்தப்பட்டு முழுப் பயனளிக்காப் பள்ளிக்கூடங்களை ஆதரிக்காததோடு, பெண் **பாடசாலையில்லாத பிரதேசத்தில் ஆண் பாடசாலையில் பெண்கள் ஆண்களுடன் பயின்று வராத திரவிய சகாயப் பாடசாலைகளுக்கும் உதவி அளிக்க மாட்டார்கள்.** பெண்கள் தங்கள் சகோதரருடன் பள்ளிக்கு வரச் செய்யுங்கள். வீட்டுவேலைக்காக பெண்குழந்தை தேவையாயிருப்பின் பையன் அந்த வேலையைச் செய்யட்டும். பெண் பள்ளிக்கு வரட்டும். ஆரம்பக்கல்வி முன்னேற்றமடைய இன்னொரு வழி இன்ஸ்பெக்டிங் உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் பள்ளிக்கூடங்களைப் பார்வையிடுவதையும் அதிகப்படுத்தல்.

ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பளம் அதிகம் தரல் வேண்டுமென்பது நாம் கருதற்பாலது. சென்ற சில வருடங்களில் பயின்ற திரவிய சகாய பாடசாலைகளின் ஆசிரியர்களின் கிராண்டு இரு முறை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த கிராண்டு தற்போது மூன்று மாதங்களுக் கோர் முறை அளிக்கப்பட்டும் வரு

கிறது. சர்வீஸ் ரெஜிஸ்தர்களை ஏற்படுத்தியதும் இவர்களுக்கு பேருதவி அளித்திருக்கும் என நம்புகிறேன். போர்டு பாட சாலை ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரிவர பட்டுவாடா செய்யப் படுவதில்லை என்பது மெய்யே. இது பற்றி அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதால் இனி அவர்கள் இது விஷயத்தில் பயம்கொள்ள இடமில்லை. ஆசிரியர்கள் தகுந்த யோக்கியதாம்சம் பெற்றிருப்பது கருதி, லோவர் எலிமென்டரி ட்ரெயினிங் ஸ்கூல்களை அறவே மூடிவிட்டோம். தற்போது ஹையர் எலிமென்டரி, செகண்டரி கிரேடு பயின்றவரின் தொகை அதிகரித்துள்ளது. விசேஷமாய் அநேக ஆரம்பப் பாடசாலை களில் கல்லூரிகளில் கலை பயின்றவர்களும் வேலை செய்கின்றனர்.

இப்போது நமது மாகாணத்தின் கல்வித் தேர்ச்சியைக்காட்ட சில புள்ளி விவரங்களைத் தருகிறேன். 1936-ம் வருஷத்திய கல்வித் தேர்ச்சியையும் 1940-ம் வருஷத்திய கல்வித் தேர்ச்சியை யும் ஒத்துப்பார்த்தால் இது நன்கு விளங்கும். தற்போது பெண் கல்வி 150 சத வீதம் அதிகரித்துள்ளது. இந்த குறுகிய காலத் தில் இவ்வளவு சீரிய பயனை அடையமுடியுமாயின் விடாது உழைத்தால் எவ்வளவு உயரிய பலனை அடையலாம்.

கடந்த நான்கு வருடங்களில் பள்ளியில் சேர்க்கப்பட்ட தாழ்த்தப்பட்ட ஜாதிப் பெண்களின் சேர்க்கை 138 சத வீதமும் ஆண்களின் சேர்க்கை 95 சத வீதமும் அதிகரித்துள்ளது. முஸ்லீம் பெண்களின் சேர்க்கை 300 சத வீதமும் ஆண்களின் சேர்க்கை 139 சத வீதமும் அதிகரித்துள்ளது. யாவரையும் ஒருங்கே நோக்குமிடத்து பெண்களின் சேர்க்கை 150 சத வீத மும் ஆண்களின் சேர்க்கை 127 சத வீதமும் அதிகரித்துள்ளது. 1936-ம் வருஷத்திற்கு முந்தி கல்வியில் தேர்ச்சி அடைந்த ஆண் பெண்களின் தொகை 150,000-க்கு கீழிருந்தது. 1940-ம் வருஷத்தில் இது 400,000-க்கு சற்று அதிகமாக இருக்கிறது.

அரசாங்கம் மிகுதியும் குறைந்த அளவில் மிக அவசியமான உபப் பாடசாலைகளையும், பூரண பிரதம பாடசாலைகளையுமே வேண்டுகின்றது. 1936-ல் பள்ளிக்கூடங்கள் 7,000 க்குச் சற்று அதிகமாக இருந்தன. தற்போது ஏறக்குறைய 34,000 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

இந்த பொது ஜனக் கல்வியின் நிலை, இன்னும் அதிகமதிக மாய் விர்த்தியாக வேண்டியிருக்கிறது. இதற்காக உங்களனை வருடைய ஒத்துழைப்பையும் மிகுதியும் கோருகின்றேன்.

தமிழ்த் தொண்டு

(ஆசிரியர் M. S. சுந்தரேச அய்யர், R. C. T. School, திண்டிவனம்)

திருக்குறளின் சிறப்பு

வள்ளுவ ளிளங்கோ ஆதி
வல்லுநர் வகுத்த நூலைத்
தெள்ளற வாசி யாமல்
திரிந்திடும் பரத நாட்டீர்!
வெள்ளய ரென்றே யுள்ளி
வீணிலே யழிந்தி டாமல்
உள்ளுற ஞானம் பற்றி
உயர்ந்த நாடா க்குவீரே— (3)

ஆங்கிலத் தமிழர்

செந்தமிழ் ஞானத் தோடு
சிறப்புடன் பி. ஏ. பட்டம்,
எந்தையி னருளால் பெற்றே
இலங்கிடும் பரத நாட்டீர்!
இந்தமா நிலத்தில் யாரும்
இழிசொலைப் பகரா வண்ணம்
அந்தமாய் நடந்து நாளும்
அருமை நாடாக்கு வீரே— (4)

கம்பர் கவிநயம்

தேனிசைப் புலவ ரென்று
"டெனிஸனைப்" புகழ்ந்து கூறி
மாநிலத் துவகை கூறும்
மாண்பிலாப் பரத நாட்டீர்!
மேனிலைக் கம்பர் பாட்டை
விருப்புடன் கற்று நீவீர்
நானிலத் துவகை எய்தி
நல்லநா டாக்கு வீரே— (5)

ஆசிரிய உலகம்

முற்காலமும் தற்காலமும்

(M. V. Rajendram)

அற்புதமும் அருளும் ஆப்த நண்பர்கள். இருவரும் பாளை யங்கோட்டை அர்ச். சவேரியார் கல்லூரியில் கல்வி பயின்றூர்கள். நல்ல புத்திசாலிகள். 1939-ம் வருடச் சர்க்கார் பொதுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றனர். அற்புதத்தின் தகப்பனுருக்குத் தேகசுகம் குன்றவே, ஏராளமான பணச்செலவு உண்டாயிற்று. ஆகையால் தன் அருமருந்தன்ன மைந்தனைத் தான் நினைத்தபடியும் அவன் ஆசையைப் பூர்த்திசெய்யவும் மேல் வகுப்புக்கு அனுப்ப முடியாமல் போயிற்று. அற்புதமும் கலாசாலை மேற்படிப்பை இச்சிக்காமல், திருச்சிராப்பள்ளித் திருக்குடும்பப் போதனுமுறைப் பாடசாலையை அடைந்தான். அன்பனைப்பிரிய மனமற்ற அருளும் அவன் சென்று அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பல்கலைக் கழக முதல் வகுப்பில் (I. U. C.) அமர்ந்தான்.

'அருள், சென்ற ஆண்டு இந்தத் தாமிரவர்ணியின் கரையில் இதே மரத்தடியில்தான் நாம் உட்கார்ந்து நீ உயர்தரப் படிப்புக்குப் போவதையும் நான் போதனுமுறை கற்கப் போவதையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்,' என்று சொல்லிக்கொண்டே மருத மரத்தின் வேரொன்றில் அமர்ந்தான் அற்புதம். 'ஆமாம் நாள் எவ்வளவு சிக்கிரம் பறந்து போயிற்று,' என்று அருள் மொழிந்தான். உட்காருமுன் பின்புறம் பார்க்க, பள்ளிச்சிறுன் ஒருவன்—ஏழுவயது இருக்கும்—வெகு ஆனந்தமாகத் தலையை அசைத்து ஏதோ பாடிக்கொண்டு புத்தகத்தைப் பிரித்துக் கொண்டே பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குச் செல்வதைக் கண்ணுற்றுன். ஆற்றங்கரையிற் செல்லும் அச்சிறுவனைச் சுட்டிக்காட்டி, 'பார் அற்புதம் அந்தப் பயலை; எவ்வளவு உல்லாசமாகப் போகிறுன். அவனுக்குப் படிப்பு கசப்பாகத் தோன்றுது என்றே நினைக்கின்றேன். அவனுடைய வயதில் நாம் படிக்கும் போது பள்ளிக்கூடம் என்றுல் எவ்வளவு வெறுப்பு. குட்டுப் படாத நாளே கிடையாது. எவ்வளவு அடி! உபாத்தியாயர் காதைப் பிடித்தால் கண் மூக்கெல்லாம் 'விண்ண்' என்குமே, என்றுன்.

அற்புதம்: அப்பா! நமது தலைமை உபாத்தியாயர்! அவர் படித்தது ஏழாவது, படித்துக் கொடுப்பது எட்டாவது வகுப்

பிற்கு. அவரிடம் கேள்வி கேட்டால் மண்டையைப் பிளந்து விடுவார். யாரையாவது மனமார அடிக்காவிட்டால் அன்று உறக்கமே வராதுபோலும்!

அருள்: தற்காலத்துக்கும் முற்காலத்துக்கும் வெகுதூரம். இப்போது பத்தாவது படித்தவர்கள் ஐந்தாவது கற்றுக்கொடுக்கிறார்கள். அவர்களிடம் படிக்கும் மாணவர்கள் நல்ல அறிவாளிகள் ஆவார்கள் என்பதற்கு ஐயமே இல்லை.

அற்புதம்: அதுமாத்திரமல்ல, கல்வி கற்றுக்கொடுக்கும் முறையே முற்றிலும் மாறிவிட்டது. ஆரம்பக் கல்வியானது நமது காலத்தில் இருந்ததைவிட, பன்மடங்கு மேன்மை பெற்றிருக்கிறது. பண்டைமுறைகளையெல்லாம் குப்பை என்று தள்ளிவிட்டனர். போதனா முறையிலும் மாற்றம். எல்லாப் பாடங்களையும் வாழ்க்கை சம்பந்தப்படுத்தியே போதிக்க வேண்டும். பழைய மனநூலும் (Psychology) மாற்றப்பட்டு நவீன மனநூல் என்றாயிற்று. எலிமெண்டரி கிரேடு மாணவர்களும் மனநூல் கற்றே ஆகவேண்டும். மேலும் கைவேலை (Hand Work) உடற்பயிற்சி (Physical activities) என்பவைகளைப்பற்றி சர்க்கார் அளிக்கும் பத்திரத்தில் (T. S. L. C.) இரண்டு மூன்று பக்கங்கள் நிரப்பப்படவேண்டுமாம்.

அருள்: அப்படியானால் நமது பண்டைத் தமிழ் முறைகள் கேவலமானவைகள் என்று எண்ணுகிறாயா? நமது தமிழ் பண்டிதர் ஜெகத்து ரக்ஷக ஐயர் எவ்வளவு அழகாக நன்னூலில் இருந்து கல்வி கற்கும் முறை, ஆசான் குணம் முதலியவற்றை எடுத்துச் சொல்வார்.

அற்புதம்: பண்டை முறையை நான் எப்படிக் கேவலமானது என்று சொல்வேன்? அம்முறையில் பயின்றவர்களெல்லாம் வித்வான்களாகவில்லையா?

ஆனால் அக்காலப் படிப்பு வேறு; இக்காலக் கல்வி வேறு. முன்பு ஒவ்வொரு ஆசிரியரும் சில மாணவர்க்குத்தான் கற்பித்தனர். இப்போதோ மாணவர் அதிகம், வயதும் சிறுபருவம், பாடங்களும் பலபிரிவினதாக இருக்கின்றன. உடற்பயிற்சி, மனப்பயிற்சி, உலகஞானம், ஆன்மஞானம், சமூகசேவை, தேசாபிமானம், இராஜபக்தியாவும் சேர்ந்தளிக்கப்படவேண்டியதாய் இருக்கிறது. இங்ஙிலையில் பழைய முறையைக் கையாளுவது அசாத்தியம். தற்காலம் எல்லாம் விஞ்ஞான முறையிலேயே நடைபெறுகின்றன. அக்காலம் பிரம்பே ஆசிரியரின் உற்றதோழன். இப்

போது அதுதான் உதவாது. மாணவர்களை உற்சாகப்படுத்தியே பாடம் நடத்தவேண்டும். அவர்களுடைய மனப்பான்மையை அறிந்து அவர்களின் போக்கின்படியே நடக்கவேண்டும். ஆசிரியரின் எண்ணங்கள் அவர்கள் கற்பிக்கும் பாடங்களில் ஊடாடாமல் அவர்களால் கற்பிக்கப்படும் பாலரை முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும். இதைத்தான் பாலர்களையே முக்கிய நோக்கமாகக் கொண்ட கல்வி (Child centered system of education) என்கிறார்கள். சென்ற 50 ஆண்டுகளுக்குள் கல்வித் துறையில் ஓர் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. மாண்டிசோரி முறை, சுயநோக்கமுறை (Project method) டால்டன் முறை, வார்தாத் திட்டம் இன்னும் பல திட்டங்கள் உற்பத்தியாயின. இம்முறைகள் கட்டாயம் நற்கனிகொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். தற்கால ஆசிரியர்கள் இவற்றில் பயிற்சி கொடுக்கப்படுகிறார்கள்.

அருள்: நானும் அவ்விதமே நம்புகிறேன். நம் நாட்டின் முன்னேற்றம் நமது தேசத்தின் போக்கை ஒட்டிய கல்வியில் தான் இருக்கிறது என்பது எனது துணிபு. தன் ஊரையும் சுற்றியுள்ள காட்டையும் தவிர, வேறொன்றையும் அறியாத குருடர் எத்தனையாயிரம்! நூற்றுக்கு 91 பேர் குருடராயிருந்தால் நாடு எப்படிச் சீர் பெறுவது? நீயாவது உனது நூதனமுறையிற் கற்ற கல்வியால் நாட்டுக்கு நன்மை செய்வாயாக! .... அதோ தம்பி வருகிறான்!

பலே கெட்டிக்காரன்

பையா, இன்னுமா காணமற்போன காலணாவைத் தேடிக் கொண்டிருக்கிறாய்?

இல்லை, அந்தக் காலணா கிடைத்து விட்டது.

என் தம்பி கண்டு பிடித்து எடுத்தான்.

அப்படியானால் இன்னும் என்ன தேடுகிறாய்?

“ என் தம்பியை!”

பாடக் குறிப்பு

வகுப்பு: V. பாடம்: இயற்கை. பாகம்: தோட்டப்பூச்சிகள்.

நேரம்: 40 நிமிஷம்.

நோக்கம்: தோட்டப் பயிர்களுக்குக் கெடுதிசெய்யும் பூச்சிகளையும், அவற்றை யழிக்கும் வழிகளும் எனும் விஷயத்தைப் புலப்படுத்துதல்.

உபகரணம்: தோட்ட விரோதிகளான உயிருள்ள பூச்சிகள், அவற்றின் விவரணப் படங்கள், பூதக்கண்ணாடி, கைவலை, சுண்ணாம்பு, உப்பு, பாச்சைக்கட்டி, சவர்க்கார மருந்து, புகையிலைக் கஷாயம் முதலியன.

குறிப்பு: தோட்டத்தைப் பார்வையிடுதலும், பூச்சி பிடித்துள்ள செடிகளை உற்று நோக்குதலும் அவசியம்.

விஷயம்	முறை
பீடிகை: அவரை, வெண்டை முதலிய செடிகளின் இலைகளில், துவாரங்களும், அவற்றின் குருத்துகள் வளர்ச்சியில் குன்றியும் இன்னும் சில தோட்டச் செடி கொடிகள் வெளுத்து, செழுமையற்றுக் குன்றியும் காணப்படுகின்றன.	விஷயத்திலுள்ளவை போன்ற மாறுபாடுகளைப்பற்றி வினவியும் அதைப் பார்க்கச்செய்தும், காணப்படும் பூச்சிகளைக் கவனித்தும், (அல்லது) அவ்விதத் தாவர பாகங்களை வகுப்புக்குக் கொண்டுவந்து காட்டியும், பொதுவாய் ப்ரஸ்தாபிக்கவும். பின்னர் நோக்கத்தைத் தெளிவுரக் கூறவும்.
பாட விளக்கம்	
கெடுதல் செய்யும் பூச்சிகள்: 1. செடிப்பேன்கள் அல்லது அசுஉண்ணிகள்.	அவரை, வெண்டை போன்றவற்றில் இப்பூச்சிகள் அடர்ந்திருப்பதைக் காட்டவும். பூதக் கண்ணாடியைக் கொண்டு பரிசோதிக்க. நம் தலைப்பேன் போன்றவையே தாவரப்பேனும் எனக் கூறவும்.
செடிகளின் தண்டு, குருத்து இவற்றில் வசித்து தாவர ரசத்தை உறிஞ்சும். இவற்றை யழிக்க, புகையிலைக் கஷாயத்தோடு சவர்க்கார ஜலத்தைக் கலந்து தெளிக்கவும். மரச் சாம்பலும் தூவலாம்.	இம்மருந்துகளைக் காண்பித்து, அவற்றைத் தயாரிக்கும் விதத்தையும் சுருக்கிக் கூறி விளக்குக.

விஷயம்	முறை
2. செடி மூட்டுப்பூச்சிகள் வெண்மை அல்லது சிவப்பு நிறமுள்ளவை. செடிகளின் சத்தை உறிஞ்சி செடியின் வளர்ச்சியைக் குறைக்கின்றன.	கத்தரி, கொத்தவரை, சீமைத் தக்காளி போன்றவற்றில் காணப்படுவதைக் காட்டுக. படுக்கை மூட்டுப்பூச்சி நமது இரத்தத்தை உறிஞ்சுவதுபோல் இவை தாவர ரசத்தை உறிஞ்சும் எனக் கூறச் செய்க.
இவற்றைப் போக்க மரச் சாம்பல், சுண்ணாம்புநீர், புகையிலைக் கஷாயம் இவற்றை உபயோகிக்கத்தகும்.	மருந்துகளைக் காட்டிச் சற்று விவரிக்கவும்.
3. கம்பளிப்பூச்சிகள்— விசேஷமாக இலைகளைக் கடித்துத்தின்று செடிகளை நாசம் செய்யும்.	பூசணி வகைகளில் விசேஷமாய்க் காணப்படுவதைக் கவனிக்கச்செய்யவும்-படங்களையும் காட்டலாம்.
இவற்றைக் கொல்ல சீமை எண்ணெய் கலந்த ஜலத்தையடித்தல். மரச்சாம்பல் போடுதல். முக்கியமாய் இவற்றின் உற்பத்திக்குக் காரணமான வண்ணாத்திப்பூச்சிகளை அழிக்கவேண்டும்.	வண்ணாத்திப்பூச்சி போன்றவை இலைகளில் முட்டைகளிடுமாதலின் அவ்விலைகளைக் கிள்ளியெறியவேண்டும் அல்லது மருந்துகளை உபயோகிக்கவேண்டுமெனக் கூறி விளக்குக.
4. தத்துக்கிளி, வெட்டுக்கிளி தாவரங்களின் இலை, பூ முதலிய பாகங்களைக் கடித்தும், வெட்டியும் செடிகளைப் பாழாக்கும்.	சோளம், கம்பு போன்றவற்றினின்று இவற்றைப் பிடித்து ஒன்றின் வாய், உதடு (பற்கள்) முதலிய பாகங்களைப் பரிசோதிக்கவும் (பூதக்கண்ணாடியைக் கொண்டு) படங்களையும் காட்டுக.
இவற்றைப் போக்க, துணியால் செய்த கைவலையை வீசிப் பிடித்து சீமை எண்ணெயில் போட்டுக் கொல்லவும் இவற்றின் முட்டைகளையும் (பூமியினுள்) அழிக்க வேண்டும்.	துணி கைவலையைக் காட்டி அதைச் செய்யும் விதத்தைச் சுருக்கிக் கூறவும். நிலத்தை அடிக்கடி கொத்திவிடவும் பிறகு சுண்ணாம்பு பாச்சைக் கட்டி மருந்து இவற்றை பூமியினுள் போடவும்.

விஷயம்	முறை
5. எறும்பு கரையான்— செடிகளின் அடிப்பாகத்தில் விசேஷமாய்க் காணப்படும். இவை தாவரரசத்தை உறுஞ்சுகின்றன. இவற்றைப் போக்க சீமை எண்ணெயையும் ஜலத்தையும் (ஜலம் 4 பங்கு) கலந்து பீச்சாங்குழல்கொண்டு அடிக்கவும்.	இளம் பயிர்களில் காணப்படும் எறும்பு வளை, கரையான் புற்றுகளைத் தோட்டத்தில் கண்டுபிடித்து அதை வெட்டியெறிந்தும், மருந்துகளை ஊற்றியும் போக்கலாம் என்பதை விளக்கலாம்.
6. வண்டுகள்—செடிகளின் பூ, காய் கனிகளிலுள்ள ரசத்தைக் குடிக்கும், வேர்களில் வசித்தும், தாவரங்களைக் கெடுக்கும. பூமிக்குள்ளும், மரப்பட்டைகளிலும் முட்டையிட்டு விருத்தியாகும்.	பழவர்க்கச் செடிகளில் இவற்றைக் காட்டவும், வண்டுகளின் புழுக்களைப் பூமியிலிருந்து வெளி எடுத்துப் பார்க்கச் செய்யவும் மரப்பட்டைகளிலும் அவற்றைக் காட்டவும் படங்களையும் காட்டலாம்.
அழிக்கும் விதம்: பொடி மணலையும் உப்பையும் கலந்து (சம அளவு) தூவலாம். பூமியை அடிக்கடி கொத்திவிடவும்.	மருந்தைத் தயாரிக்கும் விதத்தைக் கூறி விளக்குக. பூமியைக் கொத்துவதால் சூரிய வெப்பம் உட்செல்லும். வெப்பத்தால், முட்டைகள் இறந்துபோகும் என விவரிக்க.
பூச்சிகளை அழிக்கும் மற்ற உபாயங்கள் : 1. களைச் செடிகளைப் பிடுங்கியெறியவேண்டும்.	பூச்சிகளின் உற்பத்திக்குக் களைச் செடிகள் காரணமாகும் என்பதை வினவி அறியச் செய்க. நெரிஞ்சி, குப்பைமேனி, கோரைப்புல், மூக்கரட்டை முதலியவற்றைக் காட்டலாம்.
2. பயிர்களை மாற்றி மாற்றிச் சாகுபடி செய்யலாம்.	பூச்சிகளின் பழக்கவழக்கங்கள், உணவு காரணமாய் மாற்றிப் பயிரிடலாகும் எனக் கூறி விளக்கவும்.
திருப்பிப் பார்த்தல்	கீழ்வருவனபோன்ற கேள்விகளின் மூலமாய் விஷயத்தைத் தொகுத்துக் கூறச் செய்க:—

விஷயம்	முறை
	(1) அசு உண்ணிகளின் செய்கை யாது? அவற்றைப் போக்குவதெப்படி? (2) செடி மூட்டைப் பூச்சிகளுக்கும் படுக்கை மூட்டைப்பூச்சிகளுக்கும் ஒற்றுமை வேற்றுமை கூறுக. (3) கம்பளிப்பூச்சிகள் செய்யும் தீங்குகள் யாவை? அவற்றைப் போக்குவதெப்படி? (4) வண்டுகளின் புழுக்களை எப்படிக் கண்டுபிடிப்பது? (5) புகையிலைக் கஷாயம் எப்படித் தயாரிக்கப்படுகிறது? (6) களைகளை ஏன் அடிக்கடி அகற்றவேண்டும்? (7) பயிர்களை மாற்றிப் பயிர் செய்வதின் நன்மை என்ன?
கரும்பலகைச் சுருக்கம்	(விஷயத்தைத் தெரிவித்து வருகையில் க. ப.-வில் அப்போதைக்கப்போது குறிப்புகள் பின்வருமாறு செய்திருக்கவேண்டும்.)
க. ப. சு. தோட்டப் பயிர்களுக்குக் கெடுதல் புரிவன: (1) அசு-உண்ணிகள். (2) செடி மூட்டுப்பூச்சிகள். (3) கம்பளிப் பூச்சிகள். (4) தத்துக்கிளி, வெட்டுக்கிளி. (5) எறும்புகள், கரையான். (6) வண்டுகள். (7) களைச்செடிகள். பூச்சிகளையழிக்கும் மருந்துகள்: மரச்சாம்பல்; சுண்ணும்பு நீர்; புகையிலைக் கஷாயம்; சீமை எண்ணெய் லோஷன்; பாச்சைக்கட்டித்தூள்.	**பரீட்சை** (1) தோட்ட விரோதிகள் யாவை? (2) செடிப்பேன், கம்பளிப்புழு, வெட்டுக்கிளி. இவை ஒவ்வொன்றின் உற்பத்தி, பழக்க வழக்கம் இவற்றைக் கூறவும். (3) புகையிலைக் கஷாயம் எப்படித் தயாரிக்கப்படும்?—அதன் உபயோகம் யாது? (4) களைகள் என்றால் என்ன? அவற்றை ஏன் நீக்கவேண்டும். (5) இப்பாடத்தின் கருத்தை மூன்று வாக்கியங்களில் வெளியிடவும்.

பாடசாலையில் தேகப்பயிற்சி

(Rajiah)

பாடசாலையில் தேகப்பயிற்சி ஏற்படுத்துவதின் முக்கிய நோக்கங்கள். 1. வித்தியார்த்திகளின் தேக அமைப்பையும், சுகாதாரத்தையும் விருத்தி செய்தல் 2. சுகப்படுத்தக்கூடிய சாதாரண வடிவ பேதங்கள் வராமற் பாதுகாத்து, வந்தபின்னும் திருத்திக் கொள்ளுதல் 3. தேகநிலைமையும், சுகாதாரத்தையும் செயல்முறை மூலம் கற்பித்தல் 4. ஒழுங்கு தன்னடக்கம், சுயநலமின்மையாதிய சற்குணங்கள் வாயிலாய் வித்தியார்த்திகளின் குணப்பான்மையை விருத்தி செய்தல்.

இப்பயிற்சி இருவகைப்படும் :—

I. உருவமளிக்கும் பயிற்சி:—1. கருவி யேதுமின்றி விளையாடும் விளையாட்டுகள் 2. இலேசான கருவிகளுடன் செய்யும் அப்பியாசங்கள் 3. கனமான கருவிகளுடன் செய்யும் அப்பியாசங்கள். தேகாப்பியாச வகுப்பில் மாணுக்கர்கள் தசைநார்களின் சரியான அமைப்புக்காகவும், உள்ளும் புறமுமுள்ள இரத்தாயசயம், இருதயம், காது, மூக்கு முதலிய அவயவங்களின் அபிவிருத்திக்காகவும் அநேக அப்பியாசங்களைச் செய்கிறார்கள். இவ்வப்பியாசங்களில் அவர்கள் யாதொரு கருவிகளுமின்றி கை, கால் முதலிய அவயவங்களைச் சுழற்றியே பயிற்சி பெறுகின்றனர். டம்பல்ஸ், காலா முதலிய சிறிது கஷ்டமான அப்பியாசங்களைச் செய்வதால் தசைநார்கள் புத்துயிரும் வன்மையும் அடைகின்றன. பார் (Bar) விளையாட்டுகள், குதிரைச்சவாரி முதலியவை இதிலும் கஷ்டமானவை. எனினும் அவை அவ்வப்போதே தேகத்திற்குப் பலமும் வன்மையும் தரவல்லன.

II. உருவமளிக்காத அப்பியாசங்கள் :—(1) கூட்ட விளையாட்டுகள்—சிறுவிளையாட்டுகள். (2) சுதேசி விளையாட்டுகள். கிளித்தட்டு, சடுகுடு—(3) பெரிய விளையாட்டுகள். கால்பந்து, ஹாக்கி.

இச்சிறு விளையாட்டுகளை மாணவர்கள் டிரில் வகுப்பில் ஆடுகின்றனர். மரங்களில் அணில், சிறுச்சுவர், பூனையும் எலியும் என்பன அவர்கள் சாதாரணமாக விளையாடுவன.

அத்தகைய விளையாட்டுகள் பந்தய விளையாட்டுகளாயும், சாதாரண விளையாட்டுகளாயும் விளையாடப் பெறலாம். சுதேசி

விளையாட்டுகளிலும் சிறுவர் விரும்புவது மணல் பாங்கான இடங்களில் காயமேற்படாமல் விளையாடக்கூடிய சடுகுடு கிளித்தட்டு முதலியவை.

பெரிய விளையாட்டுகள் விளையாட விரிவான இடம் அத்தியாவசியம். இவ்விளையாட்டுகளில் எப்போதும் ஓட்டசாட்டம் மிகுதியாயிருப்பதாலும் ஒற்றுமை, வீரம், கீழ்ப்படிதல் முதலிய குணங்கள் அமையக் கூடியனவாயிருப்பதாலும் சுத்த ஆகாயமுள்ள இடத்தில் இவற்றை ஆடுவதே சிறந்தது.

தேகப்பயிற்சியைப் பயில்விப்பதில் ஆசிரியர்கள் இலகுவிலிருந்து, கஷ்டத்திற்குப் புகும் முறையையே மேற்கொள்ள வேண்டும். விளையாடும்போது பிள்ளைகளின் உற்சாகம் முற்றும் அவ் விளையாட்டிலேயே யிருக்கச் செய்வதே ஆசிரியர் திறமை. தனிமையாய் விளையாடுவதிலும் தொகுதியாய் விளையாடுவது சிறந்தது. தாம் ஆடப்போகும் விளையாட்டுக்களைத் தத்தம் வயதுக்கும் தேக வன்மைக்கும் தக்கவாறே தெரிந்தெடுக்கவேண்டும்.

தேகப்பயிற்சி முறை இரு வகைத்து:—(1) கேட்டுப் படித்தல் (Theory) (2) செய்து அறிதல் (Practice). இவற்றுள் தேகாப்பியாசம் விளையாட்டுகள் முதலியன இரண்டாம் வகையினுள்ளேயே அடங்கும்.

தேகாப்பியாசத்தாலேற்படும் தலை சிறந்த நன்மைகளாவன. 1. புத்தித்தெளிவு. 2. நற்குணமடைதல். 3. தேகபலம். ஒழுங்கான தேகப்பயிற்சி தேகத்தின் கூன் முதலிய வடிவ பேதங்களைத் திருத்தி நேர்மையான தேகத்தையும், உறுதியான தசை நார்களையும் அளிக்க வல்லது. முறைப்படி அப்பியசித்தால் சகல அவயவங்களும் விரிந்து, சுறுசுறுப்படைதலும் சாத்தியம். கண்கவரும் வனப்பையும் திண்மையான தேகத்தையும் தரவல்லது தேகப்பயிற்சியேயன்றோ. 'ஓடியாடுதல் உடம்புக்கு உறுதி.' மனக்கலை தீர்த்து, புத்துயிரையும், ஊக்கத்தையும் அளிப்பதே தேகப்பயிற்சியின் விசேஷகுணமாம். சிறுவயதில் சிறுவர் இலகுவில் கைக்கொள்ளும் பழக்க வழக்கங்களே பின் அவர் தம் குண பாவங்களாக முதிர்கின்றன. 'இளமையிற் பழக்கம் முதுமையிற் சுபாவம்.'

மாணவர்கள் பின் சற்பிரஜைகளாகும்படி அவர்களுக்கு ஆசிரியர்கள் செய்யத்தகுங் கடமைகளாவன. (1) காலை மாலை வேலைகளில் அவர்களை ஒழுங்காக விளையாடச் செய்தல். (2) அவர்களை நல்ல சிநேகிதரோடு நற்பழக்கங்களைப் பழகச் செய்தல்

(3) தன்னடக்கம், கீழ்ப்படிதல், ஒற்றுமை, மரியாதை முதலிய சற்குணங்களை அவர்களுக்குப் பயில்வித்தல்.

பாடசாலையில் வித்தியார்த்திகளின் சுகம் சந்தோஷம், குணம் முதலிய சாத்விக இயற்கை குணங்களை விருத்தி செய்வது தேகாப்பியாசமே. எனவே தேகப்பயிற்சியின் பலனே வித்தியார்த்திகள் பாடசாலையிலடையும் சம்பத்து எனப்படும்.

இத்தகைய அபூர்வ பலனை மாணவர்க்கு அடைந்து கொடுக்கக் கருவியாகும் ஆசிரியர்கள் அநுபவசாலிகளாகவும், சரியான பரீட்சைகளில் தேறினவர்களாயும் இருக்கவேண்டும். பாடசாலையின் சகல ஆசிரியர்களும், மாணவர்களும் ஏகோபித்து விளையாட்டுகளில் கலந்துகொள்ளவேண்டும்.

பயிரிடுவோர் பழமொழிகள்

(M. Visvasam)

1. ஆடி ஒரு குழி அவரைபோட்டால் கார்த்திகை ஒரு சட்டி கறி.
2. ஆழ உழுதாலும் அடுக்க உழு.
3. வேலி யிட்டு வெள்ளாமை யிடு.
4. ஆடிப்பட்டம் தேடி விதை.
5. ஆடிப் புழுதி ஆவணி சேறு.
6. நடவுக்குத் தூவல் நாலத் தொருபங்கு.
7. நீர் பெருத்தால் நெல் சிறுக்கும்.
8. தண்ணீரில்லாத வெள்ளாமையும் தான் உழாத நிலமும் தரிசு.
9. ஐப்பசி மாதத்தில் நடவு நட்டால் ஆனைக் கொம்பு விழும்.
10. முடி முடியாய் நட்டால் கோட்டை கோட்டையாய் விளையுமா?
11. களையெடுக்கான் கபோதி.
12. மாறி தென்றல் அடித்தால் மாட்டை விற்று ஆட்டை வாங்கு.
13. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
14. பருவத்தே பயிர் செய்.
15. விளையும் பயிர் முளையிலே தெரியும்.
16. எள்ளுக்கும் கொள்ளுக்கும் நாட்கள் ஏழுபதே.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182459

அதிசயம்! இது அதிசயம்!!

உப்பு

By K. A. Mariadasan Fernando.

உலகத்தில் நாம் நமது உணவுப்பொருள்களைச் சம்பாதிப்பதில் அடையும் கஷ்டங்கள் அனந்தம் உள. ஒருவாறு சம்பாதித்து விடினும் அதை நாவுக்கு ருசிப்படுத்தவும் வேண்டியிருக்கிறது. எப்படியெனில் உணவுப் பொருள்களுக்குச் சுவைதருவது உப்பாகும். இது உணவுப் பொருளுக்குச் சுவைதருவதோடு உடம்பிற்கு பலமும் அளிக்கிறது. ஆனால் இந்த உப்பை வாங்கி உணவில் போட்டு சாப்பிடத் தகுதியற்ற பாமரமக்கள் இனிமேலாக உய்யும் வழி ஒன்றை அடைவார்களாக. 3 பைசாவுக்கு உப்பு வாங்கினால் ஒரு நாளுக்குதான் போதுமானது. அடுத்தநாள் இன்னொரு காலணா; இவ்வாறு நம் செல்வத்தைக் கவர்ந்து செல்லும் வியாபாரிகளை மறந்து உப்பை நாம் கண்டு பிடிப்போம். மேனாட்டுக்காரர் அற்பத் தொழிலாயினும் கேவலமாய் எண்ணாமல் முயற்சி எடுத்து முன்னுக்கு வருகிறார்கள்.

உப்பு எடுக்கும் விதம் :— உப்பு ஜலமுள்ள ஆற்றின் பக்கமாவது, சமுத்திரத்தின் பக்கமாவது உள்ள இடத்தில் கற்பாறை முதலியவற்றை சுத்தம் செய்து தரையை சமப்படுத்திக் கொண்டு இரண்டு பாத்திகள் கட்டவேண்டும். இரண்டு பாத்திகளும் தனித் தனிமையாக இருக்காமல் நடுவில் பெரிய வரப்பு ஒன்று பிடித்து இரண்டு பாத்திகளாக இருக்கவேண்டும்; ஒரு பாத்தி 10′ நீளமும் 9′ அகலமுமாயிருக்கவேண்டும். இன்னொன்று 7′ நீளமும் 6′ அகலமுமாயிருக்கவேண்டும். 10′ × 9′ அளவுகொண்ட பாத்தி ஆண் பாத்தி என்றும், 7′ × 6′ அளவுள்ளது பெண்பாத்தியென்றும் பெயரிடலாம். பின்பு ஆண் பாத்தியில் ஆற்றில் அல்லது கடலிலுள்ள சகதியை எடுத்து 2″ வரை போட்டு ஒரு நாள் வெயிலில் உலரப் போட்டு அடுத்த நாள் பாத்திநிறைய உப்பு ஜலத்தை மொண்டு விடுக. பின்பு பெண்பாத்தியில் 3″ வரை சகதி போட்டு பாதி நாள் உலர்ந்தபின் மிதிக்கவேண்டும்.

மிதிக்கும்போது குதிக்கால் இரண்டையும் சேர்த்து படங்களை விரித்துக் கைகளை நேராக தொங்கவிட்டுக்கொண்டு மிதிக்க வேண்டும். இன்னும் மிதிக்கும்போது ஒரே பக்கத்திலிருந்து மிதிக்காமல் மாறி மாறி (Alternate) மிதிக்கவேண்டும். இப்படி மாறி மாறி மிதிப்பதால் பாத்தி சமமாக இருக்கும். 1 மணி நேரத்திற்கு ஒரு முறையாக ஒரு நாளைக்கு 7, 8 தடவைகள் மிதிக்கவேண்டும். ஒவ்வொருதடவையும் மிதித்தவுடன் பாத்தி

வெடிக்காமல் இருக்கக் கொஞ்சம் தண்ணீர் தெளிக்க வேண்டும். இப்படி மூன்று நாள் மிதிக்கவேண்டும். அஜாக்கிரதையினாலும் சரியாக மிதிக்காமலும் இருந்தால் மேடுபள்ளங்கள் உண்டாகும். அப்படி உண்டானால் ஒரு கனத்த பலகையைக்கொண்டு மேடுள்ள பாகங்களை சமப்படுத்த வேண்டும். நான்காவது நாள் காலையில் கொஞ்சம் தண்ணீர் மாத்திரம் தெளிக்கவேண்டும். பின்பு பகல் 12 மணிக்கு ஆண்பாத்தியிலுள்ள தண்ணீரை ஒரு குச்சியால் குத்திவிட்டுப் பெண் பாத்தியில் 3" தண்ணீர் பாய்ச்சவேண்டும். அங்குலத்திற்கு அடிக்கோல் அவசியமில்லை. நம்கைவிரல்களி லுள்ள ஒவ்வொரு ரேகை ஒவ்வொரு அங்குலம். இந்தக் கணக்கின்படி தண்ணீர் பாய்ச்சவேண்டும். தண்ணீர் 3 அங்குலம் பாய்ச்சியானதும் துவாரத்தை நன்றாக அடைத்து விடவேண்டும். பின்பு ஆண் பாத்தியிலுள்ள மீதியான தண்ணீருடன் கடல் அல்லது ஆற்றிலிருந்து தண்ணீர் நிறைய மொண்டு விடவேண்டும். பின்பு மூன்று நாட்கள் கழிந்து பெண்பாத்தியில் உப்பு ஆடை தண்ணீரை மூடிக்கொண்டிருக்கும். நான்காவது நாளில் பூக்களாக தண்ணீரில் மிதந்து அன்று சாயங்காலத்திற்குள் அடியில் படிந்துவிடும். ஐந்தாவது நாளும் ஆறாவது நாளும் கற்களாக மாறிவிடும், ஆறாவது நாள் சாயங்காலம் ஒரு மெல்லிதான பலகையால் வாரி எடுக்கவேண்டும்; வாரி எடுக்கும் பாகம் கத்திபோல் இருக்கவேண்டும். உப்பு எடுக்கும்போது குறைந்த பக்ஷம் $\frac{1}{2}''$ தண்ணீர் பெண்பாத்தியினுள் இருக்கும்படி கவனிக்கவேண்டியது அவசியம்.

இப்படி எடுத்த உப்பை ஒரு இடத்தில் தண்ணீர் வடியும்படி வைத்து எடுத்துப் போகவேண்டும். இந்த தண்ணீர் வீணாகாமல் இருத்தல் நல்மாயிருக்கும். உப்பை எடுத்தானதும் பெண் பாத்தியினுள் இருக்கும் $\frac{1}{2}''$ தண்ணீரோடு ஆண்பாத்தியிலிருந்து $2\frac{1}{2}''$ தண்ணீர் பாய்ச்சவேண்டும், பின்பு ஆண்பாத்தியில் தண்ணீர் நிறைய இருக்கப் பார்க்கவேண்டும். இப்படியே எடுத்து எடுத்து சுகமாகவும், சந்தோஷமாகவும் ஜீவிக்கலாம். ஒரு தடவை எடுக்கும் உப்பு 25 படி. ஆண்பாத்தியைவிட பெண்பாத்தி தண்ணீர் பாயும்படி கொஞ்சம் பள்ளமாய் இருக்க பார்க்கவேண்டியது அவசியம். நான்கு ஐந்து தடவை உப்பு எடுத்தானபின் $2\frac{1}{2}$ அடி தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

குறிப்பு:—உப்பு தயாரிப்பது அரசாங்கத்தின் உரிமையேயாகும் என்பதை அறியவும்.

" யோசனைக் கணக்கு "

A. Alphonse Fernando, *E. 2. A*

ஒரு பிரபுவினிடம் 30 பசுக்கள் இருந்தன. அவைகளில் 10 பசுக்கள் 2 படி பாலும், 10 பசுக்கள் $\frac{3}{4}$ படி பாலும், 10 பசுக்கள் $\frac{1}{4}$ படி பாலும் கரக்கக் கூடியவை. அவர் தனது அந்திய காலத்தில் தம் மக்கள் மூவருக்கும் ஆளுக்குப் 10 பசுக்களும், பாலும் 10 படி கிடைக்குமாறு பங்கு வைத்துக் கொடுத்தார். ஒவ்வொருவருக்கும் எந்தெந்த வகை பசுக்களில் எத்தனைப் பசுக்கள் கொடுத்திருப்பார் என்பதை விடை அளிக்க.

இரண்டு சிநேகிதர் மாம்பழம் பறிப்பதற்காக மாந்தோப்பு சென்றனர். பழங்கள் பறித்து முடிந்தது. பழங்களை மூன்று பங்குவைத்து, பறித்தவருக்கு இரு பங்கும், சும்மா இருந்தவருக்கு ஒரு பங்கும் வைத்துப் பிரித்துக்கொண்டனர். இரு பங்கு எடுத்தவர், நீ எனது நேசனுயிருப்பதால் இதோ ஒரு பழம் என்றான். இப்போது இருவருக்கும் சமமாகப் பழங்கள் இருந்தன. அப்படியானால் பறித்த பழங்கள் எத்தனை ?

விடுகவி விடை

கொத்து, 32, மலர் 1; பக்கம் 15

மரக்கால் அல்லது படி

சிறுவர்களுக்கான கதைகள்

[V. M. Sammanasu]

வானம் இடிந்தது

ஒரு கோழிக்குஞ்சு ஒரு உரோஜாப்பூத் தோட்டத்திலே இரை பொறுக்கித் தின்றுகொண்டிருந்தது. அப்பொழுது, பலத்த காற்றடித்தது. மரங்களினின்றும் இலைகள் உதிர்ந்தன. உதிர்ந்த இலையொன்று கோழிக்குஞ்சின் முதுகில் விழுந்தது. உடனே அது ஒரே ஓட்டமாயோடித் தன் தாயிடம் சென்று, " அம்மா! அம்மா! நான் உரோஜாப்பூத் தோட்டத்திலே இரை பொருக்கிக் கொண்டிருந்தேன். பெரிய காற்றடித்தது, வானம் இடிந்து என் முதுகிலே விழுந்தது. என் கண்ணாரப் பார்த்தேன்; காதாரக்கேட்டேன்; என் வாலிலிருந்துகூட ஒரு இறகு விழுந்தது. நான் என்ன செய்யட்டும், அம்மா?" என்றது. அதற்குத் தாய்க்கோழி, " அப்படியா, சங்கதி. சரி, இருக்கட்டும். நாம் இதை உடனே இராஜாவிடம் போய்ச் சொல்லுவோம். வா, போகலாம்," என்றது. கோழிக்குஞ்சும், " நல்லது, அம்மா; வா, போகலாம்," என்று சொல்ல, இரண்டும் சென்றன.

செல்லும் வழியில், ஒரு சேவல் வந்தது. அது, " கோழிக்குஞ்சி! கோழிக்குஞ்சி! எங்கே போகிறிங்க?" என்று கேட்டது. அதற்குக் கோழிக்குஞ்சு, " நான் உரோஜாப்பூத் தோட்டத்திலே இரை பொருக்கிக் கொண்டிருந்தேன். பலத்த காற்றடித்தது. வானம் இடிந்து, என் முதுகிலே விழுந்தது. நான் கண்ணாரப் பார்த்தேன்; காதாரக் கேட்டேன். என் வாலிலிருந்துகூட ஒரு இறகு விழுந்து விட்டது. அம்மாவிடம் ஓடோடிப்போய்ச் சொன்னேன். வா, போய் இராஜாவிடம் சொல்லுவோம் என்று அம்மா சொன்னு; அதான், போறோம்" என்றது. " அப்படியா; நானும் உங்களோடேவரட்டுமா," என்றது சேவல். " அப்படியே, வா" என்றது கோழி. மூன்றும் போக

ஆரம்பித்தன. (வழியில், ஒரு வாத்து, ஒரு வான்கோழி, ஒரு புறு.........என்றிப்படிச் சமயத்திற் கேற்றுற்போலச் சேர்த்து ஒவ்வொன்றிடமும் மேற்கூறிய சம்பாஷணை நடப்பதாகவும், எல்லாம் பின்தொடர்ந்து போவதாகவும் கதையை அமைத்துச் சொல்லவும்.)

கடைசியாக ஒரு நரி வந்தது. கோழிக்குஞ்சைப் பார்த்துக் கேட்டது. அது பதில் சொன்னது. (முழுச்சம்பாஷணையையும் திரும்பச் சொல்லவும்.) அதற்கு நரி, "அப்படியானல் உங்களுக்கு இராஜாவிருக்கிற இடம் தெரியுமோ!" என்று கேட்டது. கோழிக்குஞ்சு, "தெரியாது" என்றது. அதற்கு நரி, "எனக்குத் தெரியும்; நான் காட்டுகிறேன். என் பின்னலே வாருங்கோ" என்றது. பறவைகள் எல்லாம் சந்தோஷமடைந்து நரியின் பின்னலே சென்றன. நரி, அவைகளை ஏமாற்றி அழைத்துக்கொண்டே வெகுதூரம் சென்றது. பறவைகளெல்லாம் சலிப்படைந்தன. நரி, "பயப்படாதீங்க இராஜா அரண்மனையிலிருப்பார். அது அங்கொரு மலைமேலே இருக்கிறது. இன்னும், கொஞ்ச தூரம்தான்" என்று ஏமாற்றி ஒரு மலைக்குகைக்கு அழைத்துக்கொண்டு போய், "இராஜா, உள்ளே இருப்பார்; போய்ச் சொல்லுங்கோ," என்றது. பறவைகளெல்லாம் நுழைந்தன. நரி விரைவாய் ஓடி அகலமான கல்லொன்றைப் புரட்டிவந்து, குகை வாயிலை அடைத்துவிட்டது. பாவம் பறவைகளெல்லாம் இறந்தன. நரிக்குப் பல நாளைக்கு நல்ல விருந்து கிடைத்தது.

OFFICE OF THE REGISTRAR ... 22 AUG 1941 MADRAS

உங்களுக்குத் தெரியுமா

நேரம் தெரிந்துகொள்வதற்கு பழய காலத்தின் முறைகள் யாவை?

1. பூமியில் ஒரு கோலை நட்டு சூரிய கிரணத்தினால் விழும் நிழலைக்கொண்டு கணக்கிட்டு மணியை அறிதல். இம்மாதிரியாக முன் காலத்தில் சூரியனுடைய கிரணங்களினால் நேரத்தை அறிந்தார்கள். இது தற்காலத்தில் (இதை) அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது.

2. ஒரு நீளமான கயிற்றை எடுத்து அதில் குறிப்பிட்ட நீளத்தில் முடுச்சுகளாகப்போட்டு அதை ஒரு நுனியில் தீயை வைத்து எரியவிட்டு அது ஒரு மணி நேரத்தில் எரியும் தூரத்தை அள்வு எடுத்து அந்த அளவில் முடிச்சுகள் போட்டு அக்கயிற்றை எரியவிடுவதில் இருந்து மணியைத் தெரிந்துகொண்டார்கள்.

3. இம்முறையையே ஓர் எரியும் மெழுகுவர்த்தியைக் கொண்டும் கண்டறிந்தனர். மெழுகுவர்த்தியில் அளவுகளைக் குறித்து அதை எரிய விடுவார்கள். பின்பு அது எரிந்து கரைந்து கொண்டுவரும். அப்போது எவ்வளவு தூரம் கரைந்தது என்று கணக்கைக்கொண்டு மணியை அறிந்துவந்தார்கள்.

4. ஓர் கண்ணாடி ஜாடி அல்லது கிளாசில் மண்ணை நிரப்பிக் கொண்டு அதன் வெளிப்புறத்து அவைகளை ஸ்கேலில் குறித்து வைப்பார்கள். அப்பாத்திரத்தின் அடியில் ஓர் துவாரம் செய்து மண்ணை கீழே கொஞ்சமாக விழும்படி செய்து வைப்பார்கள். கண்ணாடியில் இருக்கும் மண் துவாரத்தின் வழியாய் கீழேவிழ உள்ளே அளவு குறைந்துகொண்டே வரும். குறிப்பிட்ட இடத்துக்கு வந்தவுடன் அதன் மூலமாக மணியைத் தெரிந்துகொண்டார்கள். மற்றும் இதுபோலவே மணலுக்கு பதிலாக தண்ணீரை நிரப்பி அதனால் மணியை அறிந்து வந்தார்கள்.

குதிரை நின்றுகோண்டே தூங்குவதேன் ?

குதிரைகள் நின்றுகொண்டே தூங்குகின்றன. ஏன் என்றால் அதனுடைய கால் சதை மிகவும் பலமுள்ளதாகவும் கெட்டியாகவும் இருப்பதால் அதை நிலைநிறுத்த சக்தி உண்டு. இச்சக்தியினால் ஒரு குதிரையானது கடிவாளவார்களோடு பூட்டப்பட்டிருந்தபோதிலும் நிமிர்ந்து நின்று தூங்கும் சக்தியைப் பெறுகிறது. குதிரையினுடைய முதுகின் நடு நரம்பினுடைய சக்தியால் கால்களையும் பின்பாகத்தையும் மார்பு தசைகளையும் அடக்கி ஆளமுடிகிறது. இதைப்போலவே ஆடிக்கொண்டிருக்கும் கிளைகளில் உட்கார்ந்திருக்கும் ஓர் பறவை அது தான் கீழேவிழாமல் தன்னை சரிப்படுத்திக்கொள்கிறது. குதிரைகள் சோர்வு இல்லாமல் கீழே படுக்காமல், அல்லது தூங்காமல், அதிக நாட்கள் ஓடிய வண்ணமாய் இருக்கமுடியும்.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம்:

சூப்பெரின்டென்டெண்டு,
சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சினுப்பள்ளி.

நமது சரடு

அட சங்கடமே! என்ன...எங்கு சென்றாலும் இதே பேச்சுத்தானா? இந்தத் தொந்தரவுதானா? என்ன சிரமம்...உண்மையாகவே சொல்லுகிறேன், நான் இவ்வளவு அவஸ்தைப்பட்டிருக்கவேண்டியதில்லை. வீட்டிற்குப்போனால், "என்ன உன்னுடைய சரடுகளே சரடுகள்" என்கிறார்கள். காட்டிற்குப் போனாலோ, "என்ன, உன்பாட்டிலே, கப்ஸா அளக்கிறியே" என்கிறார்கள். மேட்டிற்குச்சென்றால், "ரெம்ப ரெம்ப விழுக்குறியே," என்கிறார்கள். பள்ளத்திற்குச்சென்றால், "சணல் இல்லாமல் சரடு திறிக்கிறியே" என்கிறார்கள். மற்றும் சிலர், "மரக்காலில் தூர் இல்லாமல் அளந்துபோடுறியே" என்கிறார்கள். யாருக்குத்தான் ஜவாப்பு சொல்லுகிறது. இத்துடன் விட்டுவிடுகின்றார்களா? இல்லை. இல்லை. என்னுடையப் பெயரைச் சொல்லி, சொல்லி சிரிக்கின்றார்கள். கேலி செய்கிறார்கள். என்ன தொந்தரவு. தர்ம சங்கடமாக இருக்கின்றது. என்னதான் இருந்தபோதிலும் எனக்குப் பயம் ஒன்றுமில்லை.

நீங்களாவது சும்மா இருக்கிறீர்களா...? அதுவுமில்லை. என்னுடைய பெயரை தெரிவிக்கச் சொல்லி தொந்தரவு செய்கிறீர்கள். என்னுடைய பெயரைச் சொல்லாமலிருக்கும்போது இவ்விதம் சிரித்து கேலிசெய்தால், தெரிவித்தபிற்பாடு என்ன நடக்கு.........மோ. இல்லை. இப்போது சொல்லவேமாட்டேன். பிற்பாடு தெரிவிக்கிறேன். காரியத்தைக் கவனிப்போம்.

அப்போது எனக்கு வயது பதினெட்டு. மதுரையில் ஓர் உயர்தரப்பாடசாலையில் எஸ். எஸ். எல். ஸி. படித்து பாஸ் பண்ணிவிட்டு, வேலையில்லாத் திண்டாட்டத்தால் ஊர் சுற்றிக்கொண்டு அலைந்தேன். வீண்காலம் போக்கி வந்தேன். இவ்வித நாட்களில் எனக்கு ஓர் சிறந்த நண்பர் ஒருவர் உண்டு. இவர் பார்வைக்கு நல்ல தோற்றமுடையவர். சிறு குழந்தையைப்போல் இனிய இயல்புடையவர். இவருடைய அமைந்த தன்மை யாவருடைய உள்ளத்தையும் கவர்ந்தது. இப்படி இருக்குங்காலத்தில் ஒரு நாளைக்கொருநாள் எமக்குள் அன்பு முதிர்ச்சிகொண்டு விளங்கிற்று. நட்பின் விருப்பத்தை நினைக்குந்தோறும் மக்கள் எய்தும் பேறுகளுள் இதனினுஞ் சிறந்தது பிறிதொன்று உண்டு கொல்! உண்டு கொல்! என்று என்

நெஞ்சம் உருகா நின்றது. ஆயினும் எனது நண்பரும் என்னைப் போல், டி. எஸ். எல். ஸி. படித்துப் பாஸ்பண்ணிவிட்டு, வேலைக் கிடைக்காமலிருந்தார் என்னும் விஷயம், அளவில்லாத் துக்கத் தைக் கொடுக்கக்கூடியதாக இருந்தது.

ஓர்நாள் காலை நேரம். சுமார் மணி பத்து இருக்கலாம். நானும் எனது நண்பர் சவரிராஜனும் வீட்டில் ஓர் அறையில் உட் கார்ந்துகொண்டு ஏதோ ஓர் விஷயத்தைப்பற்றி வெகு வினய மாகப் பேசிக்கொண்டிருந்தோம். கதவு இலேசாக சாற்றப்பட் டிருந்தது. வீட்டில் வேறு யாருமில்லை. எல்லோரும் வெளியே சென்று விட்டார்கள்போலும். திடீரென்று "கட், கட்" என்று கதவைத்தட்டும் சப்தம் கேட்டது. பேச்சை நிறுத்தி விட்டு, "யெஸ் கம் இன்" என்றேன். தபால்காரர் ஒருவர், கதவை திறந்துகொண்டு ஓர் புஸ்தகத்தை நீட்டினர். நான் அதை வாங்கினேன். ஆத்திரத்துடன் மேல்விலாசத்தைப் பார்த்தேன். சவரிராஜின் மேல்விலாசம் இருந்தது. மற்றும் புஸ் தகத்தின் தலைப்பில் "போதனுவிஷயப் பூங்கோத்து" என்று பெருங்கொட்டை எழுத்துகளால் வெகு நேர்த்தியாக எழுதப் பட்டிருந்தது. அந்தப் புஸ்தகம் உரியவர்க்குக்கூடப் பார்க்கக் கொடுக்காமல் பரபரப்புடன் உடைத்தேன். புஸ்தகம் அழகாக இருந்தது. உள்ளே புறட்டி வாசித்தேன். வெளி அலங்காரமே என் மனதைக் கவர்ந்துகொண்டால், உள் அலங்காரம் எவ்வித மிருந்திருக்கவேண்டும். மேலும் மேலும் வாசித்துக்கொண்டே இருந்தேன். அதில், சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள், சுற்றுத்தரவுகள், இனிமையான கட்டுரைகள், யோசனு விருத்திச் செய்யுள்கள், கணக்குகள், அவைகளுக்கு விடைகள், பாடக் குறிப்புகள், பழமொழிகள் முதலியன வெகு இனிய தமிழில் அச்சிடப்பட்டிருந்தன. எனக்கு இன்பத்தை ஊட்டியது. ஓர் வகையான மனக்கவர்ச்சியை எழுப்பியது. அப்பத்திரிகைக்கு உடனே ஓர் கட்டுரை எழுதவேண்டுமென்றும் ஆவல் உண் டானது. புஸ்தகத்தை நண்பரிடம் கொடுத்தேன். பேனவை யும் பேப்பரையும் எடுத்து ஊரார் கேலி செய்வதற்கொப்ப, 'நமது சாடு' என்ற தலைப்புடன், ஓர் கட்டுரை எழுத ஆரம்பித் தேன்.

பத்து வரிகள்கூட எழுதியிருக்கமாட்டேன் என்று நம்பு கிறேன். வீட்டிற்குப்பின்னுல் கொஞ்ச தூரத்திலுள்ள ஓர் தோப்பில், பெரும் ஜனக்கும்பலில் ஓர் பெரும் கலகம் நடக்கிறது போல் சப்தம் கேட்டது. உடனே நாங்கள் இருவரும் கதவை

பூட்டிவிட்டு விழுந்தடித்து ஓடினேம். கூட்டம் பெருங்கூட்டமல்ல. ஆனல் விஷயம் வேறு. சண்டை சச்சரவு ஒன்றுமில்லை என்று நன்ருக எனக்குத் தெரியும். நாங்கள் இருவரும் அங்கு போய்ச்சேர்ந்து நடந்த செய்தியை பூரணமாக விசாரிக்கக்கூடவில்லை, அக்கூட்டத்திலிருந்த சிலர், வேடிக்கைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். என்னைக் கண்டதும், "ஓஹோ பீடிகை வந்துவிட்டான், விடாதேயுங்கள், கையை விட்டுவிட்டுப் பீடியைக் குடித்துவிடுவோம்" என்ருர்கள். சிலர், "இ...ம் விடாதே" என்ருர்கள். "இந்த இருக்கு நெருப்புப்பெட்டி" என்ருர்கள் அநேகர். இதைக் கேட்டதுதான் தாமஸம், வேகமாக வந்த பாதை நோக்கி ஓடிவந்துவிட்டேன்.

அடாடா, அதற்குள் என் பெயரைச் சொல்லிவிட்டேனே, பரவாயில்லை. தமாஸான பெயர்தானே...சிரிக்கவேண்டாம். தப்பித்தேன் பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். பின்கட்டுரையை எழுத ஆரம்பித்தேன், இரண்டு பக்கங்கள் எழுதி முடித்தேன். இதற்குள்ளாக எனது நண்பரும் வந்து சேர்ந்தார். சிரிப்பை அடக்கமாட்டாதவராய் கீழும் மேலும் விழுந்து சிரித்தார். "சவரிராஜ் என்ன செய்தி, என்ன அங்கு நடந்தது"..."வெகு தமாஸான காரியம். அந்த தேவர், ஆட்டுக்குத் தழைபறிக்க, ஓர் வாகை மரத்தில் கஷ்டப்பட்டு ஏறி விட்டார், பின் இறங்க முடியவில்லையாம், பயமுண்டாயிர்ச்சாம், கைகாலெல்லாம் நடுங்க ஆரம்பித்ததாம், வேர்த்து விருவிருத்துப் போனர்போலும்; உதவிக்கு ஆள் கூப்பிடுவதற்காக, பாம்பு, பாம்பு என்று சப்தம் செய்தாராம்"..."வேடிக்கையான விஷயந் தான்போல இருக்கு" ஆமாசார்...பக்கத்திலிருந்த ஜனங்கள் உதவிக்கு ஓடிவந்தார்கள். எங்கே பாம்பு, எங்கே பாம்பு என்று தேடினர்கள்; பின் நம் தேவர், உள்ளதைச் சொன்ஞராம்... உடனே ஓர் பெரிய ஏணிகொண்டு தேவரை இறக்கிவிட்டார்களாம்...இதற்காக ஜனங்கள் கூச்சலிட்டு தமாஷ்செய்தார்கள்... வேறு விஷயமொன்றுமில்லை" என்று சொல்லிமுடித்தான். பின் இருவரும் நன்ருக ஆராய்ந்துபார்த்து 'பீடியை' விட்டுவிட்டு 'கை' என்று பெயர் வைத்துக்கொண்டேன். ஜனங்கள், என்னை மிஸ்டர் 'கை' என்று கூப்பிட்டுவருகிருர்கள்.

(தொடரும்.)

'கை' எழுதியது.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

14–7–'41; 19–7–41—இத்தேதிகளில் நம் பாடசாலை ரேடியோ (Radio) மூலமாய் நம் மாணவர்கள் கல்வி சம்பந்தமானவையும் பொது அறிவு விஷயமுமான நிகழ்ச்சிகளைக் கேட்டனுபவித்தனர்.

21–7–'41—இன்று வழக்கம்போல் நமது மாணவர்கள் போதனைப் பயிற்சியின்பொருட்டு வெளிப் பாடசாலைகளுக்குச் சென்று, ஆங்காங்கு, ஏற்பாடுகள் செய்திருந்தபடி வகுப்புகளை நடத்தித் திரும்பினர்.

28–7–'41; 29–7–'41; 30–7–'41—இந்நாட்களில் நம் ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) அவர்களால் இப்பாடசாலையின் வருஷாந்திர சோதனை (The School Annual Inspection) நடைபெறலாயிற்று.

* * *

5–8–'41—இன்று மாலை ஒலிக்கலை நிபுணர் Mr. Frank Wheatley அவர்களது சொற்பொழிவு. அவர் தமது அரியதோர் பிரசங்கத்தின்மூலமாய், ஆங்கில மொழிகளைச் சரியானபடி உச்சரித்தல், பேசுதல், உபந்நியாசித்தல் முதலிய விஷயங்களைத் தெளிவுபடுத்தித் தம் பேச்சுத்திறமையையும் அனுபவசித்தமாய் எடுத்துக்காட்டினர்.

எலமனூர் லேபர் பாடசாலை பெற்றோர் சங்கத் திறப்புவிழா

29-6-41-உ எம்மூர் பாடசாலையின் பெற்றோர் சங்கத் திறப்புவிழா நடந்தேறியது.

அவ்வமயம் ஸ்ரீமான் காதர்ஷா ராவுத்தரவர்கள் தலைமை வகித்தார். மாணவர்கள் கடவுள் வாழ்த்தும், வேறு இனிய கீதங்களும், கோலாட்டங்களும் நடத்தி அங்கு குழுமியிருந்த பெற்றோர்களை மகிழ்வித்தனர். ஷை பாடசாலையின் தலைமை ஆசிரியர் S. மரியசூசை என்பவர் பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதத்தைப்பற்றி விரிவான சொற்பொழிவாற்றினர். ஷை பாடசாலையின் உதவி ஆசிரியர் G. மதலைமுத்து என்பவர் சுகாதாரத்தைப்பற்றியும் மற்றும் பலர் தந்தை தாய்கள் நடந்து கொள்ளும் விதத்தைப்பற்றியும் பேசிமுடித்தனர். அக்கிராசனர் இனியதோர் சொற்பொழிவாற்றினர். முடிவில் பெற்றோர்களுக்கு சந்தன தாம்பூலமும் சிறியோர்களுக்கு சிற்றுண்டியும் வழங்கி வந்தனோபசாரம் ராஜ வாழ்த்துடன் சங்கம் இனிது கலைந்தது.

S. Mariasusai, காரியதரிசி.

சுகாதாரப்பகுதி

பாப்பாப் பாட்டு

(M. A. S. Udayar)

(சொல்லு பாப்பா மெட்டு—ஆடுபாம்பே என்ற மெட்டு)

பல்லவி

சொல்லுபாப்பா சொல்லுபாப்பா
சுகம்பெறும் வழியிது சொல்லுபாப்பா.

சரணம்

1. காலையெழுவேனென்று சொல்லுபாப்பா—தினக்
கடனைக் கழிப்பேனென்று சொல்லுபாப்பா
பாடசாலை செல்வேனென்று சொல்லுபாப்பா—நன்கு
பாடம் படிப்பேனென்று சொல்லுபாப்பா (சொல்லு.)

2. கற்றபடி செய்வேனென்று சொல்லுபாப்பா—மாலைக்
காலையில் நடப்பேனென்று சொல்லுபாப்பா
பெற்றவர் பெரியவரைச் சின்னப்பாப்பா—தினம்
பேணியே நடப்பேனென்று சொல்லுபாப்பா (சொல்லு.)

3. சுத்தமாயிருப்பேனென்று சொல்லுபாப்பா—உடை
தோய்ந்தபினுடுப்பேனென்று சொல்லுபாப்பா
சிக்கனமாய் வாழ்வேனென்று சொல்லுபாப்பா—தேச
சேவையே புரிவேனென்று சொல்லுபாப்பா (சொல்லு.)

4. ஏற்றபொழுதுண்பேனென்று சொல்லுபாப்பா—நிலைக்
கேற்ற விளையாடல் நன்று சொல்லுபாப்பா
சூட்டுநீர் குடிப்பேனென்று சொல்லுபாப்பா—பிணி
தோற்றும் வினை செய்யேனென்று சொல்லுபாப்பா
(சொல்லு.)

5. நோயினர்புரப்பேனென்று சொல்லுபாப்பா—தொற்று
நோயினையழிப்பேனென்று சொல்லுபாப்பா
நேயமாயிருப்பேனென்று சொல்லுபாப்பா—தீமை
நெஞ்சைவிட்டொழிப்பேனென்று சொல்லுபாப்பா
(சொல்லு.)

பாலர் ஸங்கீதம்

A. Gnanadickam, *Music Teacher*,
St. Joseph's Higher Elementary School, Ootacamund.

(கொத்து 32, மலர் 1, பக்கம் 24)

சிபி சக்கரவர்த்திக் கதை: நீதிபோதனை: ஜீவகாருணியம்: பாட்டுடன் கதை சொல்லல்: வகுப்பு 4, 5.

வாக்கியங்களை நன்கு மனனஞ் செய்யப்பழக்குதல்; இக்கதைப் பாடத்தில் எத்தனை நம்பர் உள்ளதோ அவைகளுக்குத் தக்கபடி பிள்ளைகளுக்கு நம்பரை பிரித்துக்கொடுத்து அவைகளில் உள்ள வாக்கியங்களையே சிலகாலம்வரை சொல்லச்செய்யவேண்டும்.

நன்ருய்ப் பாடத் தெரிந்தவர்களை ஆரம்பத்தில் பாடச்செய்து அதன்பின் யாவரையும் பாடச்செய்யலாம்.

பாடல் நிறுத்தியபின் எந்தப்பையன் வாக்கியம் சொல்லவேண்டுமோ அவன் உடனே துவக்கவேண்டும். இப்படியே மற்றவைகளும்.

கடின பதங்களை க. ப. வில் எழுதி விளக்கவேண்டும். கதையும் பாட்டும் நன்கு பூர்த்தியானபின் சிறுவர் சிறுமிகளை நாடகரூபமாக நடிக்கப் பழக்கவேண்டும். உபாத்தியாயர் பிள்ளைகளின் தராதரத்திற்கு ஏற்றவாறு விஷயங்களை சுருக்கி அமைத்தல் அவசியம்.

(பருந்து அரசனை நோக்கி)

பாட்டு. (திவ்யதரிசனம் தரலாகாதா?) ஏகம்

பல்லவி:

கம பதபம கபரிஸ <u>ரீகரிஸா</u> காகா, மபம பா
இதைக் கா்ப்பது வு-ம்முறை யோ..சொல் ராஜ,ரா.ஜனே
கம பதபம ககரிஸ <u>ரீகரிஸா</u>
இதைக் காப்பது வு.ம்முறை யோ..சொல்.

அநுபல்லவி:

பபபப <u>பாதபகம</u> ,<u>பாநிததா</u> ஸ்ஸ்ஸ்ஸ்
பசியால்வ ரு...ந்தும் , என.. க்கிதுசொந்தம்
,நிநிநி <u>தாநிதபாமா</u> .<u>கமலத பா;</u>
,பாலித்த ப . . . யம் தரலா. மோ; . . . . . இதைக்

சரணம்:

பாபப பாபத நீஸ்ரீ நீஸ்ா க்ாக்க் ரீஸ்ரீ நீஸ்ா நிஸ்நிதபாமா
நீதித ரு ம . நேர்மைபி றழா நீதிமான் நீர்உல் க . எ . . . .
பாபப பாபத நீஸ்ரி நீஸ்ா <u>ஸ்ரிக்ாக்க்</u> ரீஸரி நீஸ்ா;;
நீதித ரும். நேர்மைபி றழா நீ . . திமான் நீர்உல க.;;
பதஸ்ஸ் ஸ்ாஸ்ரி நிஸ்நித பபபத <u>பதஸ்நிநீதா</u> பமகம
ஜா. திஜ னம்பரி பா.லித்தல் கடமைவின் வா..ழ்பற வை.வழி
<u>கமபதபா;</u> . . . . . கம
யா . . . கா; . . . . . இதைக்!

11. ராஜாதி ராஜே! வெகு தூரத்திலிருந்து நான் இப்புருவைத் துரத்திக்கொண்டு வருகிறேன். பசியால் வருந்தும் எனக்கிது சொந்தம்.

12. நீர் இதைக் காப்பாற்றுவது முறையன்று. நான் மிகவும் பிரயாசைப்பட்டுத் தேடி வந்த இரையாகிய புருவை, நீர் அபயம் கொடுத்துக் காப்பாற்றுவது தருமமோ?

13. உம்மை மகா நீதிமான் என்றும், தருமத்தினின்றும் பிறழாதவரென்றும் எல்லாரும் சொல்லுகிறார்கள். உலகத்திலுள்ளவர்களை நீதியுடன் பரிபாலிப்பது உமது கடமை. ஆகாயத்தில் உலாவும் பறவைகளாகிய எங்கள் வழிக்கு நீர் வரலாமா? அந்தப் புருவை என்னிடம் விட்டுவிடும். (என்று கூறிற்று.)

14. உடனே அரசன் "அப்படியா" என்று சொல்லி அப்பருந்தைப் பார்த்துச் சொல்லுகிறான் :—

பியாக் (நிர்மல பூர்ண சந்திரனே!) ஆதி.

பல்லவி :

; ஸமா கரீ ஸாரீ தா ; ; நிரீஸரீ ஸா ; ஸா ;
அதுவும் தெ ரிந் தேன் ; அறிந்தேன் நியா ; யம் ;

அநுபல்லவி :

, ஸகா ககா காகா காமா தா ; பா ; மா ; கா ;
, உத வும்ப சுமான் ஆடு உன் ; ப ; சி ; க்கு ;

(அதுவும்)

15. நீ சொல்லுவதும் நியாயம் தான். உன்னுடைய பசியைப் போக்கிக்கொள்ள, மானோ, பசுவோ, ஆடோ எதுவேண்டுமானாலும் தருவித்துக் கொடுக்கிறேன். ஆனால் என்னிடம் வந்து (பாட்டு)

சரணம் :

; ஸா ,காக பா ; பாபா ; பபா ததா நீ ; தாபா
; தா ,யகம் போ ; லிங்கு ; சரண் புகுந் த ; இந்த
; ஸகா ககா காகா காமா தா ; பா ; மா ; கா ;
; தூய புரு வை . த்தர து ; ணி ; யேன் ; நான் ;

(அதுவும் தெரி)

16. என்னிடம் வந்து அடைக்கலம் புகுந்த இப்புருவை மாத்திரம் உன்னிடம் ஒருபொழுதும் கொடுக்கமாட்டேன். சரணடைந்தவர்களைக் காப்பாற்றவேண்டுமென்பது என் கொள்கை.

17. இதோ! பார் எவ்வளவு பயத்துடன் என் மார்பை இது தழுவிக்கொண்டிருக்கிறது. (என்றான்)

18. உடனே பருந்து மன்னர் மன்ன! (பாட்டு)

சரணம் :

; ஸஸா ககா பாபா பாபா ; பபாததா நீநீ தாதா
; பருந் தின்இ ரைபு ருபார் ; பலர் அறிந் தவி ஷயம்

; ஸகா ககா காகா காமா தா ; பா ; மா ; கா ;
; ப்ர மன்கட்டளே யதற்கென் ; செய் ; வோம் ; நாம் ;

(பல்லவி அனுபல்லவி முடிவு)

; ஸமா கரீ ஸாநீ தாதா ; நி நீ ஸரீ ஸா ; ஸா ;
; மா. மிசம் மான் ஆடு ; தான்.உத வா ; து ;

; ஸகா ககா காகா காமா தா ; பா ; மா ; கா ;
; பூ மியில் பசு வைத்தொ டேன் : ஆ ; கா ; து ;

; ஸமா கரீ ஸாநீ தா ; ; நி நீ ஸரீ ஸா ; ஸா ;
; இது வும்நீர் அறி வீர் ; ; மா. மக ரா ; ஜே ;

19. ஆட்டிறைச்சி எனக்கு உபயோகமற்றது. மானின் மாமிசமும் அப்படியேதான். பசுவையோ! யான் தொடவேமாட்டேன். அவை எனக்கு வேண்டாம்.

20. பருந்தினங்கட்கு இரை, புருவென்பது உலகம் அறிந்த விஷயம். அது கடவுள் கட்டளை. அதற்கு நாம் என்னசெய்ய இயலும். புருவை என்னிடம் கொடுத்துவிடுவதே முறை.

(தொடரும்)

மதிப்புரை

மதுரை, தெ நோபிலி பிரஸிலிருந்து வெளிவரும் "**கத்தோலிக்கு சேவை**" என்னும் மாதப்பத்திரிகையின் ஜூலை-மீ இதழ் நமது பார்வைக்கு வரப்பெற்ருேம். தற்காலம், நமது ஞானத்தந்தையான பரிசுத்த பாப்பரசர் அத்தியந்த ஆவலுடன் வற்புறுத்தி வருவது "**கத்தோலிக்கு சேவை**" என்னும் உத்தம கைங்கரியமாகும். கிராமங்கள் தோறும் நிலவும் நமது பாடசாலை ஆசிரியர்கள் சிறந்த "கத்தோலிக்கு சேவை" புரிந்து, இகபர நன்மைகளை ஒருங்கே அடைவதற்கு இப்பத்திரிகை உதவியாயிருக்கும் என நம்புகிறோம். தக்க சமயத்தில் வெளியாயியிருக்கும் இப்பத்திரிகையின் தனி இதழ், தபாற்கூலியுட்படப் பைசா ஒன்பது மட்டுமே. விபரம் வேண்டுவோர், மதுரை, தல்லாகுளம் போஸ்ட், தெ நோபிலி பிரஸ், சூபரின்டென்டெண்டுக்கு எழுதிக்கொள்வார்களாக.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182451

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு... 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

Our Employment Bureau

FOR

MANAGERS OF SCHOOLS IN NEED OF TRAINED TEACHERS	TRAINED TEACHERS IN NEED OF EMPLOYMENT

N. B :—Managers and Teachers, wishing to be benefitted by Our Employment Bureau, are requested to publish their requirements at a special concession rate in our "Poongothu", the most popular monthly in Tamil Nad among the teaching profession.

EDITOR,
"POONGOT

Reg. No. M. 1354.

V

For VICTORY

Printed by Rev. Fr. A. Susai Regis,
St. Joseph's Industrial School Press, Trichinop